# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>சங்கமித்தை மகா தேரியுடன் விஜயம் மேற்கொண்ட சந்ததியினரை சந்தித்த இந்திய உயர் ஸ்தானிகர்</u>**

கிமு 236 இல் மன்னர் தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்தில் சங்கமித்தை மகா தேரி அவர்கள் இந்தியாவிலிருந்து பயணம் மேற்கொண்டு உந்துவப் போயா நாளில் புனித வெள்ளரசு மரக்கன்றுடன் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். சிங்கள போதி வம்சம் [எஸ்.பி. வில்கமுல சங்க ரஜ தேரர் (1964). (பி. பஞ்ஞானந்த தேரர், Ed.) ரத்னகர லிமிட்டட்] போன்ற பிரசித்தமான ஆராய்ச்சிகள், பிக்குனிகள், இளவரசர்கள் மற்றும் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவுடன் சங்கமித்தை மகா தேரி அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதாக குறிப்பிடுகின்றன. இவ்விஜயத்தில் இணைந்திருந்தவர்களில் சிலருக்கு புனித வெள்ளரசு மரக்கன்றின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் வழிபாட்டு சடங்குகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

2. இவ்வாறு குறித்த பணிகளுக்காக தங்கியவர்கள் திஸ்ஸ வாவியைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடியேறினர். அப்பகுதியில் உள்ள விஹார புலங்குளம், விஹார பலுகம, விஹார கள்ளஞ்சியா மற்றும் விஹார மதவாச்சி போன்ற கிராமங்களில் அவர்கள் குடியேறினர். அரஹத் மஹிந்தவின் ஆலோசனையின் கீழ், மன்னர் தேவநம்பிய தீசன், புனித வெள்ளரசு மரத்துக்கான சடங்குகள் மேற்கொள்ளும் பொறுப்பை இரண்டு இளவரசர்களான போதிகுப்தர் மற்றும் சுமித்த ஆகியோரது சந்ததியினரிடம் ஒப்படைத்தார்.

3. இந்நிலையில், உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், வட மத்திய மாகாணத்திற்கு விஜயம் செய்தபோது, விஹார கள்ளஞ்சியாவுக்குச் சென்று, மகா துரை திரு. ஜெயவர்தன மற்றும் தற்போதைய தலைமுறையினரில் புனித வெள்ளரசு மரத்தைப் பாதுகாப்பதற்குப் பொறுப்பான ஒன்பது கிராமங்களின் தலைவர்களைச் சந்தித்தார். அவர்கள் இளவரசர் போதி குப்தரது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று திரு. ஜெயவர்தன உயர் ஸ்தானிகரிடம் விவரித்தார். சங்கமித்தை மகா தேரியுடன் வருகைதந்தோர் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களின் முன்னோர்கள் அவர்களிடம் கூறியுள்ளனர். ஒன்பது கிராமங்களில் உள்ள குடும்பங்களின் ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையினரிடமிருந்து இப்பொறுப்பை கடமையுடனும் பயபக்தியுடனும் ஏற்றுக்கொண்டதை அவர் இங்கு குறிப்பிட்டார்.

4. இச்சந்தர்ப்பத்தில், தலைமுறை தலைமுறையாக இந்த உயர்வாக மதிக்கப்படும் பணிகளை மேற்கொண்ட குடும்பங்களுக்கு மிகுந்த மரியாதை

மற்றும் பாராட்டுக்களை உயர் ஸ்தானிகர் தெரிவித்தார். இந்தியா மற்றும் இலங்கையின் பௌத்த பாரம்பரியத்திலும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இரு நாடுகளினதும் மக்களிடையே நிலவும் உறவிலும் காணப்படும் சிறப்பு பிணைப்பை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என அவர் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான சிறப்பு மற்றும் வலுவான கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியாவின் உறுதிப்பாட்டை அவர் வலியுறுத்தினார்.

5. அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி, வணக்கத்திற்குரிய பள்ளேகம ஹேமரத்தன தேரர், தனித்துவமான தொடர்புகளின் முக்கியத்துவத்தை இச்சந்தர்ப்பத்தில் மிகச் சிறப்பாகச் சுருக்கமாகக் தெரிவித்தார். தற்போதைய இந்திய உயர் ஸ்தானிகர் பீகாரைச் சேர்ந்தவராக காணப்படுவதுடன் சங்கமித்தை மகா தேரியுடன் வந்ததாக நம்பப்படும் குழுவினரும் பீஹாரை சேர்ந்தவர்கள். இந்நிலையில் இங்குள்ள மக்கள் தமது உறவினர் ஒருவரை வரவேற்கின்றனர் என மகா துரை அவர்களுக்கும் ஒன்பது கிராமங்களின் தலைவர்களுக்கும் உயர் ஸ்தானிகர் தெரிவித்திருந்தார்.

*****

**கொழும்பு**
**14 ஜூலை 2025**